திரு.ர.சதீஷ் பிரியன் (இ.நி.2)

<u>அரியலூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்களின்</u>
<u>செயல்முறை ஆணை :</u>
<u>பிறப்பிப்பவர் : மரு.அ.முத்துகிருஷ்ணன்.எம்டி.டிஎம்.டிஎன்பி.,</u>

மூ.மு.எண்: 5257/நி4/2023 நாள்:14.02.2025

**பொருள் :** நிருவாகம் - **திரு.ர.சதீஷ் பிரியன்,** இளநிலை உதவியாளர்- அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரியலூர் – தற்காலிக பணியினை பணிவரன்முறை செய்து- ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

**பார்வை :** 1. சென்னை-3, அரசு செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்.1960/PSD-D2/2023 நாள்.02.09.2023.

2.சென்னை-06 , மருத்துவம் (ம) ஊரகநலப்பணிகள் இயக்குநரின் பணி ஒதுக்கீடு ஆணை ந.க.எண்: 56867/நி2/2/2023 நாள்: 21.09.2023.

3. சென்னை-10 , மருத்துவக்கல்வி இயக்குநரின் பணி ஒதுக்கீடு ஆணை ந.க.எண்: 93355/நி2/5/2023 நாள்: 22.09.2023.

4. அரியலூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வரின் பணியமர்த்தல் ஆணை ந.க.எண்.5257/நி2/2023 நாள்: 22.09.2023.

5. தனியர் பணியில் இணைந்த நாள். 29.09.2023.

******

**ஆணை:**

பார்வையில் காணும் ஆணைகளின்படி (தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான தொகுதி IV தேர்வு செய்யப்பட்டதன் அடிப்படையில்) இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பெற்று அரியலூர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியமர்த்தப்பெற்ற **திரு.ர.சதீஷ் பிரியன்** அவர்கள் **29.09.2023 முற்பகல்** முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், தனியரின் தற்காலிக பணி **29.09.2023 முற்பகல்** முதல் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனை) சட்டம் 2016-ன் பிரிவு 28-ன் கீழ் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

அவர் மேற்கண்ட நிலையில் மூன்றாண்டுகாலத் தொடர்பணியில் ஈராண்டுகால தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக (உரிய பயிற்சி, பயிற்சியைத் தொடர்ந்து தேர்வு மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய துறைத்தேர்வுகள் முடித்தல் வேண்டும்) முடிக்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார்

14.2.25
முதல்வர்
அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
அரியலூர்.
14/02/25

**பெறுநர்:**

**திரு.ர.சதீஷ் பிரியன்**, இளநிலை உதவியாளர், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரியலூர்.
- பிரிவு அலுவலக கண்காணிப்பாளர் வழியாக

**நகல் சமர்ப்பிக்கப்படுகிறது**

1. இயக்குநர், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம், சென்னை-10
2. இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை-06

**நகல்**

1. கோப்பு நகல்
2. பதிப்பு : பணிப்பதிவேடு.